தொரனூர்—சொக்கனூர் சாலை.

* 379 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் யூனியன், தொரனூரிலிருந்து சொக்கனூர் செல்லும் பாதையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே. திருப்பூர் யூனியன் தொரனூரிலிருந்து சொக்கனூர் செல்லும் பேருந்துப் பாதை மிகச் சிறியதாக இருக்கிறது. பஸ் போகும் நேரத்திலே விவசாயிகள் தங்களுடைய மாட்டு வண்டிகளை ஓட்டி வந்தால், மிக சிரமம் ஏற்படும் நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பாதை அகலப்படுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சாலையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, இந்தச் சாலையில் 4 மைல் 2 பர்லாங் நீளத்திலே 1 மைல் 6 பர்லாங்கை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இந்தச் சாலை முழுவதும் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

மாயூரம்—மணல்மேடு நெடுஞ்சாலை.

* 380 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்—மணல்மேடு நெடுஞ்சாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு தற்போது ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவாவர்களே, மாயூரத்திலே இருந்து மணல்மேடு செல்லும் சாலை பழுது அடைந்து சீர்கெட்டிருக்கிறது. இதை விரிவுபடுத்தவிருக்கிறது இந்த அரசு என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 'இன்டென்சிவ் டெவலப்மென்ட் அகிரிகல்ச்சரல் புரகிராமின்' கீழ் சீர்திருத்த வேலை செய்யலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது இந்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.